கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 27
ஆண்டு சந்தா ரூ. 100/-

அக்டோபர் - OCTOBER
தனிப் பிரதி ரூ. 10/-

2026
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-



JC SCHOOL OF EVANGELISM - 17th Graduation Program in Africa

எந்த ஜனத்திலாயினும் அவருக்குப் பயந்திருந்து நீதியைச் செய்கிறவன் எவனோ அவனே அவருக்கு உகந்தவன்..

அப்போஸ்தலர் 10:35

ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

இதழின் உள்ளே...

ஆசிரியர் உரை	3
பெண்கள் பகுதி	7
வாலிபர் பகுதி	9
ஓராண்டில்... வேதவாசிப்பு	
சிறுவர் பகுதி	12

In Memory of J.C. CHOATE

Guest Editors : **Betty Choate, Jerry & Paula Bates**

Editor : **Dr. P.C. PHILEMON RAJA** Ph.D.,

ஆசிரியர் குழு

V. கிங்ஸ்லி ராஜா, M.S. (IT&M)., M.Th.,
R. ஆண்டனி ராஜா, D.Th.,
E. ஜோசப் பிரதீப், B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
P. பேபி ராஜா, D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

சட்ட ஆலோசகர்கள்

அட்வகேட் **B. கருப்பசாமி பாண்டியன்** B.A., B.L.
அட்வகேட் **V. சுப்பிரமணியன்** M.A., B.L.

கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 7.00 மணி

நம்பிக்கை T.V. யில்

ஞாயிறு மதியம் 3.30 மணி

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...



பல்வேறு இடங்களில் சுமார் 150 பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு மாதந்தோறும் அரிசி வழங்கப்படுகிறது.

கிருபையுள்ள வார்த்தை
நம்மை கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவராக உருவாக்க உதவும் உன்னதமானவரின் வார்த்தை

YouTube
@graciouswordcoc

World Literature Publication : Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவராக இருத்தல்...

Being a person after the Lord's own heart...



- P.C. பிலேமோன் ராஜா

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், எல்லாம் வல்ல ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பெயராலே எனது வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்ற ஒருவராக வாழ்வது, அதாவது, கர்த்தருடைய இருதயம் ஏற்றுக்கொள்ளும்படி வாழ்வது என்பது சிறந்த வாழ்வாகும். அப்படி ஒரு வாழ்வை வாழ்ந்தவராக தாவீது இருக்கின்றார். கர்த்தர் தம்முடைய இருதயத்திற்கு ஏற்றவராக அவரைத் தேடி, கண்டதாக சொல்லுகின்றார் (1சாமுயேல் 13:14; அப். 13:22). ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மோசே போன்று பலர் கர்த்தருக்கு பிரியமாக வாழ்ந்தவர்களாக இருக்கின்றனர். ஆயினும், கர்த்தருடைய இருதயத்திற்கு ஏற்றவன் என்று தாவீதை பைபிள் அடையாளம் காண்பிக்கின்ற படியினால், தாவீதிடமிருந்து, கர்த்தருக்கு ஏற்றவராக நாம் எவ்வாறு வாழமுடியும் என்பதைப் பற்றிக் கற்றுக்கொள்வோம்.

1. கர்த்தருடைய பெயரை நிந்திக்க விடாதவர்

1சாமுயேல் 17:26,45 அப்பொழுது தாவீது தன்னண்டையிலே நிற்கிறவர்களைப் பார்த்து, இந்தப் பெலிஸ்தனைக் கொன்று இஸ்ரயேலுக்கு நேரிட்ட நிந்தையை நீக்குகிறவனுக்கு என்ன செய்யப்படும். ஜீவனுள்ள தேவனுடைய சேனைகளை நிந்திக்கிறதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்தப் பெலிஸ்தன் எம்மாத்திரம் என்றான். அதற்குத் தாவீது பெலிஸ்தனை நோக்கி: நீ பட்டயத்தோடும் ஈட்டியோடும் கேடகத்தோடும்

வாசகர்கள் கவனத்திற்கு



தபால் செலவு பன்மடங்கு அதிகரித்துள்ளதால்
நமது கிருபையுள்ள வார்த்தை இதழை
நீங்கள் தொடர்ந்து பெற விரும்பினால்,
உடனே உங்கள் பதிவு எண் மற்றும்
முகவரியோடு எங்களை தொடர்புக்கொள்ளவும்.
தொடர்புக்கொள்பவர்களுக்கே தொடர்ந்து மாத இதழ்
அனுப்பி வைக்க இயலும்!

வாட்ஸ் ஆப் மற்றும் தொலைபேசியில் தொடர்புக்கொள்ள...

92 4421 4421, 92 4431 4431

என்னிடத்தில் வருகிறாய். நானோ நீ நிந்தித்த இஸ்ரயேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளுடைய கர்த்தரின் நாமத்தினாலே உன்னிடத்தில் வருகிறேன்.

பெலிஸ்திய ராணுவத்தில், காத் ஊரானாகிய கோலியாத் என்னும் பேருள்ள ஒரு வீரன், கர்த்தருடைய பெயரை நிந்திக்கிறவனாக இருந்தான். அவனது வார்த்தையைக் கேட்ட, இஸ்ரயேல் ராணுவமும், அரசனாகிய சவுலும் மிகவும் கலங்கிப் போனார்கள். ஆனால், வாலிபனாகிய தாவீதோ துணிச்சலோடு அவனை எதிர்க்க முற்பட்டான்.

தாவீது கோலியாத்தை எதிர்த்தது தனிப்பட்ட புகழுக்காக அல்ல. மாறாக, இஸ்ரயேலின் கர்த்தருடைய நாமம் நிந்திக்கப்பட்டதற்காக. நாமும் கர்த்தருடைய நாமத்திற்காக நிற்க வேண்டும். நம்முடைய வாழ்க்கை கர்த்தருடைய மகிமையை வெளிப்படுத்த வேண்டும். மகிமையான, மகத்துவமான அவரை மட்டுப்படுத்த என் வாழ்விலே நான் இடமளிக்க மாட்டேன் என வைராக்கியத்துடன் வாழ வேண்டும் (1தீமோ. 6:1; தீத்து 2:4; மத்தேயு 5:16).

2. கர்த்தரை நம்பி, அவரை சார்ந்து வாழ்ந்தவர்

1சாமுயேல் 17:46,47 இன்றையதினம் கர்த்தர் உன்னை என் கையில் ஒப்புக்கொடுப்பார். நான் உன்னைக் கொன்று, உன் தலையை உன்னை விட்டு வாங்கி, பெலிஸ்தருடைய பாளயத்தின் பிணங்களை இன்றையதினம் ஆகாயத்துப் பறவைகளுக்கும், பூமியின் காட்டுமிருகங்களுக்கும் கொடுப்பேன். அதனால் இஸ்ரயேலில் தேவன் ஒருவர் உண்டு என்று பூலோகத்தார் எல்லாரும் அறிந்துகொள்ளுவார்கள். கர்த்தர் பட்டயத்தினாலும் ஈட்டியினாலும் ரட்சிக்கிறவர் அல்ல என்று இந்த ஜனக் கூட்டமெல்லாம் அறிந்து கொள்ளும். யுத்தம் கர்த்தருடையது. அவர் உங்களை எங்கள் கையில் ஒப்புக்கொடுப்பார் என்றான்.

தாவீது ஒருமுறை கரடியையும், இன்னொரு முறை சிங்கத்தினையும் கொன்றுபோட்ட அனுபவமும், வலிமையும் இருந்தாலும் (1சாமுயேல் 17:34-36), தன்னை மற்றவர்கள் வீரன் என்று சொன்னாலும் (1சாமுயேல் 16:18), தாவீது கர்த்தரை நம்பி, அவரையே சார்ந்து இருந்தார். கர்த்தரையே தன் பெலமாக கொண்டிருந்தார் (1சாமுயேல் 17:37).

பைபிள், நமக்கு கண்டதையும் (மாம்சத்தினை) நம்பாதே (எரேமியா 17:5,6), உன் இருதயத்தையும் நம்பாதே (எரேமியா 17:9,10), அப்படி நம்பினால் அது ஆபத்தானதாகும் என எச்சரிக்கின்றது (எரேமியா 17:11-19), ஆகையால், நாமும் தாவீதைப் போல, கர்த்தரை மாத்திரம் நம்பி, அவரைச் சார்ந்து வாழ்வோம். அதுவே ஆசீர் நிறைந்த வாழ்வாகும் (எரேமியா 17:7,8). ஆகையால், நான் என் நம்பிக்கையை யார் மீது? எதன் மீது வைத்துள்ளேன்? என சுய பரிசோதனை செய்து, கர்த்தரை மாத்திரம் நம்பி, அவரையே பற்றிக்கொண்டு வாழ்வோம்.

3. கர்த்தருக்காக யுத்தம் செய்தவர்

1சாமுயேல் 17:48,49 அப்பொழுது அந்தப் பெலிஸ்தன் எழும்பி, தாவீதுக்கு எதிராகக்

வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-

Ph.No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

கிட்டிவருகையில், தாவீது தீவிரமாய் அந்தச் சேனைக்கும் அந்தப் பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி, தன் கையை அடைப்பத்திலே போட்டு, அதிலிருந்து ஒரு கல்லை எடுத்து, கவணிலே வைத்துச் சுழற்றி, பெலிஸ்தனுடைய நெற்றியில் பட எறிந்தான். அந்தக் கல் அவன் நெற்றியில் பதிந்து போனதினால், அவன் தரையிலே முகங்குப்புற விழுந்தான்.

தாவீது, கர்த்தருக்காக கோலியாத்தை எதிர்த்து யுத்தம் செய்தார். அப்பொழுது தாவீதுக்கு கர்த்தர் வெற்றியை கொடுத்தார். நாம் தாவீதைப் போல, கர்த்தருக்காக யுத்தம் செய்ய வேண்டியவர்கள். நமது கோலியாத் உடலும், ஊனும், இரத்தமுமான மனிதர்கள் அல்ல, நாம் அவர்களோடு சண்டையிடவும் கூடாது (மத்தேயு 5:39). மாறாக, இந்த உலகத்தை பாவம் என்னும் கவர்ச்சியினால் மயக்கி, மனுக்குலம் முழுவதினையும் காலம் காலமாக மோசம்போக்கிக்கொண்டிருக்கும் ஆகாயத்து அதிகாரப் பிரபுவாகிய சாத்தானே நமது எதிரி, நாம் அவனோடு தான் யுத்தம் செய்ய வேண்டும் (எபேசியர் 6:10-12).

நமது யுத்தம் ஆவிக்குரியது. அது சரீரபிரகாரமானது அல்ல. அதுபோல நமது யுத்த ஆயுதங்களும் உடல் சார்ந்தது அல்ல, அது சத்துருவானவனின் அரண்களை அழித்து மனுக்குலத்தினை காக்கின்ற ஆவிக்குரியதாகும் (2கொரிந்தியர் 10:4). ஆம், ஆவியாயும் ஜீவனாயும் இருக்கின்ற வேதவசனங்களும், கர்த்தர் மீது நாம் கொண்டுள்ள விசுவாசமும் நமது ஆயுதமாகும் மற்றும் நமது கேடகமாகும் (எபேசியர் 6:13-17; யோவான் 6:63). ஆகையால், நாம் ஆவிக்குரிய ஆயுதங்களைக் கொண்டு சாத்தானோடு, பாவத்தை எதிர்த்து யுத்தம் செய்வோம் (எபிரெயர் 12:4; 2தீமோத்தேயு 2:5).

மேலும், நாம் கர்த்தருடைய வார்த்தையை நம்பி, அவருக்காக வாழும்போது நாம் சாத்தனோடு யுத்தம் செய்கின்றோம். மாறாக, கர்த்தருடைய வார்த்தையைவிட்டு விலகி, சுயநீதியினால் நடக்கும் போது கர்த்தரோடு யுத்தம் செய்கின்றோம். எனவே, நாம் கர்த்தரோடு யுத்தம் செய்கின்றோமா? கர்த்தருக்காக யுத்தம் செய்கின்றோமா? என்பதனை சிந்திப்போம், செயல்படுவோம் (அப்போஸ்தலர் 5:39).

4. புகழ்ச்சிக்கு மயங்காதவர்

1சாமுயேல் 24:14,15 இஸ்ரயேலின் ராஜா யாரைத்தேடப் புறப்பட்டார்? ஒரு செத்த நாயையா, ஒரு தெள்ளுப்பூச்சியையா, நீர் யாரைப் பின்தொடருகிறீர்? கர்த்தர் நியாயாதிபதியாயிருந்து, எனக்கும் உமக்கும் நியாயந்தீர்த்து, எனக்காக வழக்காடி, நான் உம்முடைய கைக்குத் தப்ப என்னை விடுவிப்பாராக என்றான்.

தாவீது, கோலியாத்தை வென்றபோது, அவனை மக்கள் அவர்களது அரசனாகிய சவுலைவிட பத்துமடங்கு அதிகமாக புகழ்ந்தார்கள் (1சாமுயேல் 18:6,7), ஆனால் தாவீது அந்த புகழ்ச்சிக்கு மயங்கவில்லை. மாறாக, தன்னை அரசனுக்கு முன்பாக செத்த நாய், தெள்ளுப்பூச்சி என்று அறிக்கை செய்கின்றார்.

தங்கத்தையும் வெள்ளியையும் சுத்தப்படுத்த ஜனங்கள் நெருப்பைப் பயன்படுத்துகின்றனர். இதுபோலவே மனிதன், ஜனங்கள் தனக்கு அளிக்கும் புகழ்ச்சியால் சோதிக்கப்படுகிறான் (நீதி. 27:21). அந்த புகழ்ச்சிக்கு மயங்காதபோது, மனிதன் தன்னைத்தானே சுத்தமாக்கி கொள்கின்றான். அந்த புகழ்ச்சிக்கு மயங்கினால், பெருமைப்பட்டு தன் புத்தியில் மழுங்கிப் போகின்றான்.

ஆனால், தாவீது முகஸ்துதியால் ஆட்கொள்ளப்படாதவராக இருந்தார். எப்படி இது சாத்தியமானது? தன்னை பெரிதாக நினைக்காதவர் மற்றும் தன்னை பற்றிய புகழ்ச்சியை நம்பாதவர் அதாவது தான் மண் என்பதும், கர்த்தரே எல்லா புகழுக்கும் உரியவர் என்ற உண்மையை உணர்ந்தவரே! புகழ்ச்சிக்கு மயங்கமால் இருப்பார் (உபா 10:20,21; லூக்கா 17:10; 2கொரிந்தியர் 3:5). தாவீது அவ்வாறாக

இருந்தார் என்பதில் ஐயமில்லை. நம் முகத்திற்கு நேராக புகழுகின்றவர்கள், நாம் சிக்கிக்கொள்ளும்படி நம் கால்களுக்கு வலைகளை விரிக்கின்றார்கள் என சாலமோன் ஞானி சொல்கின்றார் (நீதிமொழி 29:5). ஆகையால், மனிதர்கள் அல்ல, கர்த்தரே பாராட்டும்படி ஒரு வாழ்வை வாழ்வோம் (2கொரிந்தியர் 10:17,18).

5. கர்த்தருடைய வேளைக்காக காத்திருந்தவர்

சங்கீதம் 27:14 கர்த்தருக்குக் காத்திரு. அவர் உன் இருதயத்தை ஸ்திரப்படுத்துவார். திடமனதாயிருந்து, கர்த்தருக்கே காத்திரு.

கர்த்தர், சாமுயேல் மூலமாக தாவீதை அரசனாக அபிஷேகம் செய்தபோது, அவரது வயது 12-15 இருக்கலாம் என்றும் (1சாமுயேல் 16:11 - மிகவும் இளையவர்), தாவீது கோலியாத்தை வென்றபோது, அவரது வயது 16-19 இருக்கலாம் என்றும் (1சாமுயேல் 17:33 - இளைஞன்), தாவீது அரசரனாகிறபோது அவரது வயது 30 (2 சாமுவேல் 5:4) என்றும் பைபிளில் சொல்லப்பட்டுள்ளது. அப்படியானால், தாவீதை கர்த்தர் அரசனாக அபிஷேகித்தப் பின்பு, ஏறக்குறைய 15 ஆண்டுகள் கர்த்தருடைய வேளை வரும் வரை காத்திருந்தார். சவுலை அகற்றிவிட்டு, அரசனாகும் என்ற வாய்ப்பு தாவீதுக்கு இருந்தது. ஆனாலும் தாவீது அவசரப்படவில்லை. கர்த்தர் வாக்குக்கொடுத்திருந்தாலும், அதை அடைய தவறான வழியைப் பயன்படுத்தக்கூடாது. கர்த்தர் நியமித்த நேரத்திற்காக காத்திருக்க வேண்டும் என்பதில் தாவீது உறுதியாக இருந்தார். நாம் காணாததை நம்பினோமாகில், அது வருகிறதற்குப் பொறுமையோடே காத்திருக்க வேண்டும் (ரோமர் 8:25). ஆம்! நம்பினால் காத்திருப்போம், நம்பிக்கையோடு காத்திருப்போம் அது நல்லது மற்றும் ஆசீர் நிறைந்தது (சங்கீதம் 37:34; சங்கீதம் 62:5; நீதிமொழிகள் 20:22; ஏசாயா 30:18; 40:31; புலம்பல் 3:26) ஏனெனில், நல்லவரும் நன்மை செய்கிறவருமாகிய கர்த்தர் அதினதின் காரியங்களை அதினதின் காலங்களில் மிகவும் நேர்த்தியாக செய்வார் (பிரசங்கி 3:11). ஆமென்.

(தொடரும்...)

– அன்புடன், ஆசிரியர்

Gospel Through Media by Evangelism Team

Philemon & Kingsly in Tamil: **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
Nambikkai TV: Sunday 3:30 - 4:00 pm.

Rajanayagam & Benny Martin in Tamil: **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

Arjunan in Tamil: Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

Hindi TV program: **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

P. K. Varghese in Malayalam: Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

Joshua & Ricky Gootam in Telugu:
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

Amul Bansod – Aurangabad (Marathi)

MCN News channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

சுவிசேஷப்பணியில் பெண்கள்



- Sis. Emily Fisher

அறிமுகம்:

வேதாகமம் பல்வேறு பெண்களின் செயல்களையும், அவர்களுடைய பெயர்களையும் நமக்காகப் பதிவு செய்கிறது. இது தேவனால் அருளப்பட்ட வெளிப்பாட்டின் ஒரு அடையாளமாகும். ஏனெனில், முதல் நூற்றாண்டில் வாழ்ந்த ஒரு மனிதன் பெண்களைப் பற்றிய இத்தகைய விஷயங்களைப் பதிவு செய்திருக்க வாய்ப்பில்லை.

நம்முடைய ஆண்டவரின் போதனைகளிலும், அவருடைய முன்மாதிரியிலும், பெண்ணின் ஆரம்பகால நோக்கம் என்ன என்பதையும், அவளிடம் காட்டப்பட வேண்டிய தூய்மையின் கடமை என்ன என்பதையும் அவர் நமக்குக் காட்டுகிறார் (மத்தேயு 5:27-32). கிறிஸ்து பெண்களிடம் புரிதலையும், மரியாதையையும், அனுதாபத்தையும் வெளிப்படுத்தினார் (லூக்கா 10:38, 42). கிறிஸ்து இரட்சகராக அங்கீகரிக்கப்பட்டு, அவருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து, வாழப்படும் இடமெல்லாம், பெண் ஆணின் அன்பான துணையாகவும், நம்பிக்கைக்குரியவராகவும் மதிக்கப்படுகிறாள்.

சுவிசேஷப் பதிவுகளில் இடம்பெறும் பெண்கள், சுவிசேஷப் பணியில் தங்களுடைய சிறப்பான முன்மாதிரிக்காக குறிப்பிடத்தக்கவர்கள். பெண்களைப் பற்றிய அதிகமான தகவல்களை லூக்கா பதிவு செய்திருப்பது சுவாரஸ்யமானதாகும். அவர் பெண்களை சுவிசேஷப் பணியில் பின்வரும் நான்கு அம்சங்களுக்கு முன்மாதிரியாகக் காட்டுகிறார்:

1. விசுவாசத்தன்மை
2. நன்றியுணர்வு
3. தைரியம்
4. ஆதரவு



1. விசுவாசத்தன்மை:

A. மரியாள் (லூக்கா 1:38 56; அப்போஸ்தலர் 1:14)

1) கர்த்தரால் மிகவும் கிருபை பெற்றவள்

அவளுடைய குணநலன் மகத்துவமானது; ஆனால் அவளும் நம்மைப்போன்ற ஒரு பெண்ணே.

2) இதோ, நான் கர்த்தருடைய அடியாள்; உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)

அறிந்து கொள்வோம்

மாதம் ஒரு "பூ"

தளவம்



தளவம், பிச்சிப்பூ என்னும் பெயர்களால் தமிழ் இலக்கியங்களில் குறிப்பிடப்பட்ட இம்மலர், இக்காலத்தில் செம்முல்லை (Jasminum polyanthum) என வழங்கப்படுகிறது. இதனைச் சாமந்தி என வழங்குகின்றனர். செவ்வந்தி எனப்படும் பூ வேறு. தளவ மலரின் மொட்டுகள் சிவப்பாக இருக்கும். அதாவது பூவிதழின் புறத்தோற்றம் சிவப்பாக இருக்கும். மலர்ந்ததும் ஒவ்வொரு பூவிதழின் அகத்தோற்றமும் வெண்மையாக இருக்கும். இவ்வாறு பூவிதழின் தளம் மாறுபடுவதால் இதனைத் தளவம் என்றனர். இது முல்லைப் பூவின் இனம். இந்த முல்லை-மொட்டு செந்நிறத்தில் இருப்பதால் இதனைச் செம்முல்லை என்றனர்.

அவள் உண்மையான மற்றும் மெய்யான பக்தியையும், தாழ்மையையும் வெளிப்படுத்தினாள்.

காபிரியேலிடம் அவள் அளித்த பதிலை சகரியாவின் பதிலுடன் ஒப்பிட்டுப் பாருங்கள் (லூக்கா 1:18).

அவளுடைய அற்புதமான விசுவாசம் அவளுடைய பதிலில் வெளிப்படுகிறது.

3) பெண்களுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள்

பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட எலிசபெத்து, லூக்கா 1:39-45-ல் மரியாளை இவ்வாறு அழைக்கிறாள்.

கத்தோலிக்க மதம் மரியாள் கன்னியாகவே இருந்தாள் என்ற கருத்தைத் தொடர்ந்து நிலைநிறுத்த முயற்சிக்கிறது. ஆனால், வேதாகமம் யோசேப்புடன் திருமண வாழ்க்கையில் அவளுக்கு வேறு பிள்ளைகளும் இருந்ததாகக் கூறுகிறது (மத்தேயு 13:55,56; மாற்கு 6:3).

மரியாள் தன்னைப் பற்றி ஒருபோதும் எதையும் கோரவில்லை. ஆனால் சில மனிதர்கள் அவளுடைய குமாரனுக்கு மேலாக அவளைத் தொழுதுகொள்ளும் பொருளாகத் தவறாகத் தேர்ந்தெடுத்தனர்.

4) மரியாளின் பாடல் (லூக்கா 1:46-55)

தேவன் தன்னைத் தேர்ந்தெடுத்த மகத்தான கிருபையைக் குறித்து அவளே வியப்பில் ஆழ்ந்திருந்தது, அவளுடைய துதிப்பாடலில் தெளிவாகத் தெரிகிறது. தன்னுடைய தாழ்மையான நிலையைக் கருத்தில் கொண்ட தேவனை அவள் மகிமைப்படுத்தினாள் (லூக்கா 1:46-55).

அவளுடைய பாடலில் பதிவு செய்யப்பட்டுள்ள வற்றிலிருந்து, அவளுடைய மனம் பழைய ஏற்பாட்டின் வாக்குத்தத்தங்களாலும் தீர்க்கதரிசனங்களாலும் நிறைந்திருந்தது என்பது தெளிவாகிறது.

5) மரியாளின் சோதனைகள் (லூக்கா 2:25-35)

குறிப்பாக தன் குமாரனுடைய வாழ்க்கையின் கடைசி மூன்று ஆண்டுகளுக்கு முன்பும் அந்த ஆண்டுகளிலும் அவள் அனுபவித்த கசப்பான சோதனைகளை நாம் கற்பனை மட்டுமே செய்ய முடியும்.

தான் பாலூட்டி வளர்த்து பராமரித்தவராகிய இயேசு சிலுவையில் அனுபவித்த கடுமையான வேதனையை அவள் நின்று பார்த்தாள்.

ஒரு தாயாக தனக்கிருந்த அதிகாரம், தேவனுடைய குமாரனாகிய தன் குமாரனுடைய அதிகாரத்திற்கு கீழ்ப்படிவதற்காக விட்டுக்கொடுக்கப்பட வேண்டும் என்பதை அவள் உணர வேண்டியிருந்தது.

இயேசு பூமிக்குரிய உறவுகளைவிட ஆவிக்குரிய உறவுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தார் (மத்தேயு 12:46-50; லூக்கா 11:28).

சிலுவையில் தம் கடைசி மூச்சுவரை அவளை கவனித்துக்கொண்டு, அவளை யோவானிடம் ஒப்படைத்தார்.

அந்தத் தருணத்தில், சிலுவையில் தொங்கியவர் தன் மகன் அல்ல; உலகம் உண்டாகுமுன்பே அவர் இருந்தார்; அவர் தாயாக இருப்பதற்குப் பதிலாக, அவளே அவருடைய பிள்ளை என்பதைப் பற்றிய மகத்தான உண்மை மரியாளுக்கு இறுதியாகப் புரிந்திருக்க வேண்டும்.

6) சீஷர்களுடன் ஐக்கியம்

வேதாகமம் மரியாளைப் பற்றிக் கொடுக்கும் கடைசி காட்சி மிகவும் உற்சாகமளிப்பதாகும் (அப்போஸ்தலர் 1:12-14).

அவள் சீஷர்களுடன் கூடி இருந்தாள்; உயிர்த்தெழுந்த இரட்சகரால் அவர்களுடைய வாழ்க்கைகள் என்றென்றும் மாற்றப்பட்டிருந்தன!

(தொடரும்...)

தமிழாக்கம்: சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

சிறுவர்களுக்கான கேள்விகள்

1. மோசேயின் தாய் தன் குழந்தையை எத்தனை மாதம், எப்படி பாதுகாத்தார்?
2. பார்வோனின் மகள் குழந்தையை எதிலிருந்து எடுத்தார்கள், என்ன செய்தார்கள்?
3. ரெகொபெயாமின் ஆட்சி காலத்தில் இராஜ்யம் ஏன் பிரிக்கப்பட்டது?
4. ஆகாஸ் ராஜா கடவுளுக்கு விரோதமாய் செய்த செயல் என்ன?
5. எசேக்கியா ராஜா செய்த நல்ல காரியம் என்ன?

கர்த்தருடைய பந்தியின் அடிப்படைகள்



- Bro. Shane Fisher

கர்த்தருடைய பந்திக்கான அதிகாரம்

தேவனைப் பிரியப்படுத்துவதில் நம்முடைய விசுவாசம் முக்கியப் பங்கு வகிக்கிறது என்பதை நாம் அறிவோம் (எபிரெயர் 11:6; ரோமர் 10:17). தேவன் என்ன விரும்புகிறார் என்பதை நாம் புரிந்துகொள்ள, அவர் தனது சித்தத்தை நமக்கு வெளிப்படுத்த வேண்டியிருந்தது. மகிழ்ச்சியூட்டும் விதமாக, அவர் அதைச் சரியாகச் செய்துள்ளார் (1 கொரிந்தியர் 2:10-12). வேதவசனங்களில் இணைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் 'சங்கிலித் தொடரை'க் காண்பதன் மூலம், எது அங்கீகரிக்கப்பட்டது என்பதை நாம் அறியலாம். இந்தச் சங்கிலித் தொடர் பிதாவாகிய தேவனிடமிருந்து தொடங்குகிறது; அவரே தம் குமாரனைத் தமது வலது பாரிசத்தில் ஆளுகை செய்ய அனுமதித்தார் (எபேசியர் 1:20-23). குமாரனாகிய இயேசு, அப்போஸ்தலர்களுக்கு அற்புத வல்லமையை அளித்து பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார் (யோவான் 16:7-15; அப்போஸ்தலர் 2:1-4). தேவன் நமக்கு எதைச் செய்ய அதிகாரம் அளித்துள்ளார் என்பதை அப்போஸ்தலர்கள் வெளிப்படுத்தினார்கள் (கொலோசெயர் 3:17). அவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட மற்றும் அங்கீகரிக்கப்பட்ட காரியங்களில் ஒன்றுதான் 'கர்த்தருடைய பந்தி' என்று நாம் அறியும் இந்த நினைவு ஆசரிப்பு ஆகும். இது பின்வரும் இடங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது: (மத்தேயு 26:26-28; மாற்கு 14:22-24; லூக்கா 22:17-20; அப்போஸ்தலர் 2:42; 20:7; 1 கொரிந்தியர் 10:16-21; 11:17-34).

கர்த்தருடைய பந்தியின் ஆரம்பம்

இதன் தோற்றம் என்ன? எருசலேமில் உள்ள ஒரு மேல் அறையில், கர்த்தரும் அவருடைய சீஷர்களும் பஸ்கா பண்டிகையின் உணவை உட்கொள்ளக் கூடியிருந்த ஒரு வியாழக்கிழமை இரவில்தான் இது நிகழ்ந்தது. பஸ்கா உணவுக்குப் பின்னர்தான் இயேசு கர்த்தருடைய பந்தியை ஏற்படுத்தினார் (லூக்கா 22:14-16). பின்னர், அப்போஸ்தலர்கள் பரிசுத்த ஆவியானவரால் சகல சத்தியத்திற்குள்ளும் வழிநடத்தப்பட்டதால் (யோவான் 16:13), இந்த நினைவு ஆசரிப்பு அப்போஸ்தலர்களின் அங்கீகாரத்துடன் கடைப்பிடிக்கப்பட்டது. 1 கொரிந்தியர் 11:23-25-ல், பவுல் அதே இரவை மீண்டும் குறிப்பிடுகிறார்.

கர்த்தருடைய பந்தியின் கூறுகள்

சிலுவையில் நிகழ்ந்த தமது மரணத்தின் நினைவாக நம்முடைய கர்த்தர் எடுத்துக்கொண்ட மற்றும் அடையாளப்படுத்திய இரண்டு கூறுகள் உள்ளன.

1. முதலாவது கூறு அப்பம்: அது என்ன வகையான அப்பம்? புளிப்பு இல்லாததா அல்லது

சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

1.	A. ஹானா ஜோதிராணி	மதுரை
2.	V. ஏஞ்சல் ஜோயன்னா	மதுரை
3.	M. ஜோனத்தான்	கரூர்
4.	S. ஜூடித் ஆராதனா	ராணிபேட்டை
5.	A. ஆடின் ∴பேபியோ	ராணிபேட்டை
6.	A. ஆலன் காலேப்	ராணிபேட்டை
7.	S. ஜோசுவா	ராணிபேட்டை
8.	S. ஜூடா லியோ	ரஸ்தா
9.	G. ஜெர்லின்	ரஸ்தா
10.	P. ஆக்னஸ் பவுலா	மதுரை
11.	J. நவீன் பீட்டர்	மதுரை
12.	J. கிறிஸ்டினா ஜாய்ஸ்	மதுரை
13.	D. யேகேஸ்வரி	பெரியகுளம்

புளிப்புள்ளதா? இயேசு கர்த்தருடைய இராப்போஜனத்தை ஏற்படுத்தியபோது, யூதர்கள் பஸ்கா பண்டிகையின் உணவை அப்போதே முடித்திருந்தனர். வீட்டிலிருந்து புளிப்புள்ள பொருட்கள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும் என்பதால் (யாத்திராகமம் 12:1-19), அவர்கள் புளிப்பில்லாத அப்பத்தையே பயன்படுத்தினார்கள் என்று நாம் அறியலாம். அந்த மேல் அறையில் புளிப்புள்ள பொருட்கள் எதுவும் பயன்படுத்தப்பட்டிருக்க வாய்ப்பில்லை. மேலும், இயேசு ஒருபோதும் மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறவில்லை; அவர் அதை முழுமையாகக் கடைப்பிடித்தார் (எபிரெயர் 4:15). புளிப்பில்லாத அப்பம் பயன்படுத்தப்பட்டதற்கான மற்றொரு காரணம், அது இயேசுவின் குற்றமற்ற சரீரத்தைப் பிரதிபலிக்கிறது; அந்தச் சரீரத்தில் அவர் ஒருபோதும் பாவம் செய்யவில்லை (எபிரெயர் 7:26).

2. இரண்டாவது அம்சம் திராட்சைக் கொடியின் கனியாகும்: 'திராட்சைக் கொடியின் கனி' என்பது பாலஸ்தீனத்தில் உள்ள கொடிகளில் விளைந்த திராட்சைப் பழங்களைக் குறிக்கிறது. திராட்சை சாற்றைப் பிழிவதற்காகப் பழங்களை மிதித்துச் சாறு எடுக்கும் பழங்காலத் திராட்சை ஆலைகள் அப்பகுதியைச் சுற்றி உள்ளன. கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்றால், 'திராட்சைக் கொடியின் கனி' (Fruit of the vine) என்ற பதமே பயன்படுத்தப்பட்டது; சூழலைப் பொறுத்து புளிக்கவைக்கப்படாத அல்லது புளிக்கவைக்கப்பட்ட திராட்சை ரசத்தைக் குறிக்கப் பொதுவாகப் பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல்லான (oinos) பயன்படுத்தப்படவில்லை. இது பாவமன்னிப்புக்காகச் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்தைப் பிரதிபலிக்கிறது (மத்தேயு 26:28-29).

(தொடரும்...) – தமிழாக்கம்: சகோ. **கியாம்லஸ்**

பொதுவான செய்திகள்

தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005

இந்திய நாடாளுமன்றத்தால் அரசு மற்றும் அரசு உதவி பெறும் நிறுவனங்களிடமிருந்து மக்கள் உரிமையுடன் அறிந்து கொள்வதற்கு ஏதுவாக உருவாக்கப்பட்ட சட்டம் ஆகும். இச்சட்டம் 2004 திசம்பர் மாதம், நாடாளுமன்றத்தில் அறிமுகம் செய்யப்பட்டு 2005 மே 11, அன்று, மக்கள் அவையிலும், 2005 மே 12, அன்று மாநில அவையிலும் நிறைவேற்றப்பட்டது. 2005 சூன், 15 அன்று குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெறப்பட்டது. 2005 சூன் 21, அன்று அரசுப் பதிவிதழில் வெளியிடப்பட்டு 2005 அக்டோபர் 12, அன்று முதல் நடைமுறைக்கு வந்தது.

இந்தியாவின் ஜம்மு காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்தியாவின் பிற பகுதிகள் அனைத்திற்கும் பொருந்தும். இதன்படி ஒவ்வொரு இந்தியக் குடிமகனும்/மகளும் தகவல் பெறும் உரிமை பெற்றவர்கள். ஒவ்வொரு நாளும், 4800க்கும் மேற்பட்ட தகவல் அறியும் உரிமை விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. சட்டம் தொடங்கிய முதல் பத்து ஆண்டுகளில் 17,500,000 விண்ணப்பங்கள் தாக்கல் செய்யப்படுகின்றன. இந்தச் சட்டத்தின் கீழ், இந்தியாவின் எந்தவொரு குடிமகனும் ஒரு 'பொது அதிகாரம்' (அரசாங்க அமைப்பு அல்லது 'அரசின் கருவி') அமைப்பிலிருந்து தகவல்களைக் கோரலாம்.

உடனடியாகவோ அல்லது முப்பது நாட்களுக்குள்ளோ பதிலளிக்க வேண்டும். ஒவ்வொரு பொது அதிகாரமும் தங்கள் பதிவுகளை பரந்த அளவில் பரப்புவதற்கும், சிலவகை தகவல்களை முன்கூட்டியே கணினிமயமாக்குவதற்கும் இந்த சட்டம் தேவைப்படுகிறது, இதனால் குடிமக்களுக்கு முறைப்படி தகவல்களைக் கோர குறைந்தபட்ச உதவி தேவைப்படுகிறது. இந்தியாவில், மஸ்தூர் கிசான் சக்தி சங்கதன் என்ற அமைப்பு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தை நிறைவேற்றுவதில் முக்கியப் பங்கு வகித்தது. தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005இன் சூத்திரதாரி அருணா ராய் என்பராவார். தகவல் அறியும் உரிமை இந்தியாவின் ஒவ்வொரு குடிமகனுக்கும் சட்டபூர்வமான உரிமை ஆகும்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 இன் கீழ் உள்ள அதிகாரிகள் நீதித்துறை அதிகாரிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

(தொடரும்...)

ஓராண்டில் திருமறையை வாசித்து முடிக்க...



நவம்பர் - 2026

காலை			மாலை	
தீத்து			**எரேமியா**	
1.	2	☐	24-26	☐
2.	3	☐	27-29	☐
3.	பிலேமோன்	☐	30,31	☐
எபிரெயர்				
4.	1	☐	32,33	☐
5.	2	☐	34-36	☐
6.	3	☐	37-39	☐
7.	4	☐	40-42	☐
8.	5	☐	43-45	☐
9.	6	☐	46,47	☐
10.	7	☐	48,49	☐
11.	8	☐	50	☐
12.	9	☐	51,52	☐
			புலம்பல்	
13.	10:1-18	☐	1,2	☐
14.	10:19-39	☐	3-5	☐
			எசேக்கியேல்	
15.	11:1-19	☐	1,2	☐
16.	11:20-40	☐	3,4	☐

காலை			மாலை	
எபிரெயர்			**எசேக்கியேல்**	
17.	12	☐	5-7	☐
18.	13	☐	8-10	☐
யாக்கோபு				
19.	1	☐	11-13	☐
20.	2	☐	14,15	☐
21.	3	☐	16,17	☐
22.	4	☐	18,19	☐
23.	5	☐	20,21	☐
1 பேதுரு				
24.	1	☐	22,23	☐
25.	2	☐	24-26	☐
26.	3	☐	27-29	☐
27.	4	☐	30-32	☐
28.	5	☐	33,34	☐
2 பேதுரு				
29.	1	☐	35,36	☐
30.	2	☐	37-39	☐

★ கொடுக்கப்பட்டுள்ள வேதாகம பகுதிகளை வாசித்து முடித்தவுடன் அருகில் உள்ள கட்டத்தில் ☑ செய்யவும்..

வேதாகமத்தை முறையாக கற்றுக்கொள்ள: 92 4421 4421, 92 4431 4431

அடுத்த இதழில்...

அறிந்துகொள்வோம்!



மிளகு

செரிமானம் மேம்படும்: உணவை நன்றாகச் செரிக்கச் செய்து, பசியின்மையைப் போக்குகிறது.

இருமல் மற்றும் சளி: மிளகு கஷாயம் அல்லது மிளகுப் பொடியைப்பனை வெல்லத்துடன் சேர்த்துச் சாப்பிட்டால் இருமல் மற்றும் ஜலதோஷம் குணமாகும்.

விஷ முறிவு: உடலில் உள்ள நச்சுத் தன்மையை நீக்கும் ஆற்றல் மிளகுக்கு உண்டு.

பல் வலி: உப்புடன் மிளகுப்பொடி சேர்த்துப் பல் துலக்கினால் பல் வலி, கூச்சம் மற்றும் துர்நாற்றம் நீங்கும்.

எடை இழப்பு: உடல் எடையைக் கட்டுப்படுத்தவும், இரத்தச் சர்க்கரை அளவைச் சீரமைக்கவும் உதவுகிறது.

மோசேயின் பிறப்பு

கர்த்தருடைய செல்லப் பிள்ளைகளே! இந்த மாதம் ஒரு குழந்தையின் பிறப்பை குறித்து நாம் படிக்கலாம்.

எகிப்து என்னும் நாட்டிலே, பார்வோன் என்பவன் அரசனாக வாழ்ந்து வந்தான். அந்த சமயத்தில் இஸ்ரேல் மக்கள் எகிப்து தேசத்திலே ஒரு பெரும் திரள் கூட்டமாக வாழ்ந்து வந்தனர். இதைப் பார்த்த எகிப்து அரசன், இஸ்ரேல் மக்களை மிகவும் அடிமைப்படுத்தத் தொடங்கினான். அப்படி இருந்தும் இஸ்ரேல் மக்கள் இன்னும் அதிகமாக பழுகிப் பெருகினார்கள். இதைக் கண்ட பார்வோன் மிகவும் கோபம் கொண்டு, இஸ்ரேல் மக்களிடையே பிறக்கும், ஆண் குழந்தைகளை கொன்று போடும்படி கட்டளையிட்டான். இந்த சமயத்தில் லேவியின் குடும்பத்தாரில் ஒருவன், லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை திருமணம் செய்தான். அவர்களுக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது.

அந்த குழந்தை உங்களைப்போல அழகுள்ளதாக இருந்தது. அந்த குழந்தையின் தாய், பார்வோன் ராஜாவுக்கு தெரியாமல் மூன்று மாதம் ஒளித்துக் வளர்த்துக்கொண்டு வந்தாள். அதன்பிறகு அவள் அந்த குழந்தையை ஒளித்து வைக்கக்கூடாமல், ஒரு பெட்டியை எடுத்து, குழந்தையை அதற்குள் வைத்து, நதியோரமாய் இருக்கிற நாணலுக்குள்ளே வைத்தாள்.

அந்த சமயத்தில், பார்வோன் ராஜாவின் மகள், ஆற்றில் குளிக்கும் படியாக வந்தாள். அப்பொழுது, நதியோரமாய் இருந்த பெட்டியை கண்டு தன் வேலைக்காரிகளை அனுப்பி, அந்தப் பெட்டியை எடுத்து வரும்படி சொன்னாள். அந்தப் பெட்டியை கொண்டு வந்ததும், பெட்டிக்குள் இருந்து ஒரு குழந்தையின் அழுகை சத்தம் கேட்டது. உடனே பெட்டியை திறந்து குழந்தையை வெளியே எடுத்தார்கள். அப்பொழுது அந்த குழந்தை அழுது கொண்டிருந்தது.



அப்பொழுது பார்வோனின் மகள் குழந்தைக்கு பால் கொடுக்கும்படி இஸ்ரேல் பெண்களில் ஒரு பெண்ணை அழைத்துக் கொண்டு வரும்படி சொன்னாள். அவர்கள் போய் அந்த குழந்தையின் தாயையே அழைத்துக் கொண்டு வந்தார்கள். பிள்ளை பெரிதாகும் வரை தன் தாய் வளர்த்தாள். பெரிதான பிறகு அந்தப் பிள்ளையை பார்வோன் ராஜாவின் மகளிடம் கொண்டு போய் விட்டாள். அவள், அவனை தண்ணீரிலிருந்து எடுத்தேன் என்று சொல்லி, அவனுக்கு மோசே என்று பெயரிட்டாள். பிள்ளை வளர்ந்து பெரியவனான்.

கர்த்தருடைய அன்பு பிள்ளைகளே! ஒரு குழந்தைக்கு எதிராக ஒரு நாட்டின் அரசன் நின்றான். குழந்தையின் தாய் பிள்ளை வேண்டாம் என்று ஆற்றிலே வீசி விட்டாள். ஆனால் கர்த்தரோ எந்த ராஜா, குழந்தை சாக வேண்டும் என்று நினைத்தானோ! அந்த ராஜாவின் மகளை வைத்தே அந்த குழந்தையை பாதுகாத்தார்.

எந்த தாய் வீசி எறிந்தாளோ! அதே! தாயின் அரவணைப்பு கிடைக்க செய்தார். கர்த்தர் அந்த குழந்தையை நேசித்தார். அதேபோல கர்த்தர் உங்களையும் நேசிக்கிறார். அரசால் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கும், தன் தாயாள் கைவிடப்பட்ட குழந்தைகளுக்கும் கர்த்தரிடம் ஊக்கமாக ஜெபியுங்கள். ஆமென்.

மனப்பாட வசனம்: சங்கீதம் 84:5

"உம்மிலே பெலன்கொள்ளுகிற மனுஷனும், தங்கள் இருதயங்களில் செவ்வையான வழிகளைக் கொண்டிருக்கிறவர்களும் பாக்கியவான்கள்."

– சகோ. பீட்டர்

சாலமோனின் இராஜ்ஜியம் பிரிக்கப்படுதல்

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைகளா!!! அனைவரும் நலமாக இருக்கின்றீர்களா? கர்த்தருடைய நாமத்தினாலே உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்!!!. பரிசுத்த கர்த்தர் தாமே உங்கள் அனைவருடனும் இருந்து உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாலமோன் ராஜாவின் காலத்திற்குப் பிறகு, இஸ்ரவேல் நாட்டில் நடந்த ஒரு முக்கியமான வரலாற்று சம்பவத்தையும், ஒரு தீர்க்கத்தரிசியின் வரலாறையும் பற்றி படிக்கலாமா! வாங்க படிக்கலாம்.

சாலமோன் ராஜா மரித்த பிறகு, அவருடைய மகன் ரெகொபெயாம் ராஜாவானான். மக்கள் எல்லாரும் அவனிடம் வந்து, 'உங்கள் தந்தை எங்களிடம் கடினமாக வேலை வாங்கினார். நீங்கள் அதை கொஞ்சம் குறைத்தால், நாங்கள் உங்களுக்கு உண்மையாய் இருப்போம்.' என்று கேட்டார்கள். இந்த வேண்டுதல்களை கையாள்வதற்கு ரெகொபெயாம் வயதான பெரியவர்களிடம் ஆலோசனை கேட்டான். அவர்கள், 'மக்களிடம் அன்பாகப் பேசி அவர்களுக்கு உதவி செய். அவர்கள் எப்போதும் உனக்கு உதவியாக இருப்பார்கள்.' என்று ஆலோசனை வழங்கினார்கள். ஆனால் ரெகொபெயாம் பெரியவர்களின் பேச்சைக் கேட்காமல், தன்னுடன் வளர்ந்த வாலிப நண்பர்களிடம் கேட்டான். அவர்கள், 'மக்களை மேலும் கடினமாக நடத்து! என் தந்தை உங்களைச் சாட்டையால் அடித்தார். நான் உங்களை முல்லுள்ள சாட்டையால் அடிப்பேன் என்று சொல்.' என்று தவறான ஆலோசனை வழங்கினார்கள்.



ரெகொபெயாம் வாலிப நண்பர்களின் பேச்சைக் கேட்டு மக்களிடம் கடினமாகப் பேசினான். இதனால் கோபமடைந்த மக்கள் அவனை விட்டு விலகினார். நாடு இரண்டாகப் பிரிந்தது. பத்து இனக் குழுக்கள் பிரிந்து யெரோபெயாம் என்பவனைத் தங்கள் ராஜாவாக்கினர். இது இஸ்ரவேல் நாடு எனப்பட்டது. இரண்டு இனக் குழுக்கள் மட்டுமே ரெகொபெயாமுடன் இருந்தனர் இது யூதா நாடு எனப்பட்டது.

கர்த்தருக்குள் அன்பான செல்லப் பிள்ளைகளா சாலமோன் ராஜாவினால் நிர்வாகிக்கப்பட்ட நாடு அவருடைய மறைவிற்கு பிறகு, அவருடைய மகன் ரெகொபெயாமின் அலட்சியத்தால் நாடு இரண்டாகப் பிரிந்தது. ரெகொபெயாம் பெரியவர்களின் ஆலோசனையை மதிக்காமல், தன்னுடைய வயதில் உள்ள வாலிபர்களின் தவறான ஆலோசனைகளின்படி நடந்ததால் நாடு இரண்டாகப் பிரிந்தது. நாம் கற்றுக்கொள்ள வேண்டியது கர்த்தருக்குள் ஞானம்பெற்ற, வயதான பெரியவர்களின் அதாவது, சபையில் உள்ள மூப்பர்களின் ஆலோசனையைக் கேட்டு அதின்படி நடந்தால் ஞானமுள்ளவர்களாக வாழ்வோம்.

மனப்பாட வசனம்: நீதிமொழிகள் 10:1

"ஞானமுள்ள மகன் தகப்பனை சந்தோஷப்படுத்துகிறான்; மூடத்தனமுள்ளவனோ தாய்க்கு சஞ்சலமாயிருக்கிறான்"

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

ஆகாஸ் ராஜாவின் பொல்லாத ஆட்சி

2இராஜாக்கள் 16

கடவுளின் செல்லங்களா? எப்படி இருக்கிறீர்கள்?

நல்லா இருக்கிறீர்களா? இப்பக்கூட ஆகாஸ் ராஜாவின் தவறான ஆட்சியை பற்றி கற்றுக் கொள்வோமா!

ஒரு ஊர்ல ஆகாசுனு ஒரு ராஜா இருந்தார். தன் கூட இருக்கிற உண்மையான கடவுளை வணங்காமல், பொய்யான கடவுளை, அதாவது மனிதன் படைத்த சிலை, பொம்மை இவற்றை கடவுளாக வணங்கினார். அதைப்பார்த்த உண்மையான நம் கடவுளுக்கு மிகவும் கோபம் வந்தது. ஏன் என்னை விட்டுட்டு இப்படி பொல்லாத காரியங்களை இந்த ஆகாஸ் ராஜா செய்கிறார். ஆதனால் கடவுள் என்ன செய்தார் தெரியுமா? ஆகாஸ் ராஜாவுக்கு



அதிகமான கஷ்டங்களை கொடுத்தார். கடவுளை விட்டுட்டு தப்பான வழிக்குப்போனதால், ஆகாசு ராஜாவால் நிம்மதியாகவே இருக்கமுடியல, ரொம்ப கஷ்டப்பட்டார்.

கடவுளின் செல்லங்களா! இதிலிருந்து கடவுள் என்னப் பாடம் கற்றுக்கொடுக்கிறார் தெரியுமா?

1. ஒரே கடவுள்தான். நாம் உண்மையான கடவுளை மட்டுமே வணங்க வேண்டும்.

2. பொம்மைகளை நம்பக்கூடாது. சிலைகளையும் பொம்மைகளையும் சாமி என்று நினைக்கக் கூடாது.

3. கடவுளுக்குப் பிடித்ததைச் செய்வோம். எப்போதும் நல்லப் பிள்ளையாக நடந்து, உண்மையான கடவுளை சந்தோஷப்படுத்துவோம்.

கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

மனப்பாட வசனம்: மத்தேயு 4:10

"உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்துகொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார்."

– சகோ. அன்பு ஏசுதாஸ்

எசேக்கியாவின் நல்ல ஆட்சி

ஹாய் குட்டீஸ்! உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்களை வாழ்த்துக்கிறேன், இந்த முறை எசேக்கியா ராஜாவைப் பற்றி கற்றுக் கொள்ளலாமா?

எருசலேம் நாட்டை தன் 25வது வயதில் ஆண்ட ராஜா தான் இந்த எசேக்கியா. இவர் எருசலேமை 29 வருடங்கள் ஆட்சி செய்தார். இவருடைய தாயின் பெயர் அபியாள். இவருக்கு முன்னாடி ஆட்சி செய்த ராஜாக்களில் நிறைய பேர் நல்ல முறையில் அதை செய்யவில்லை. ஆனால் இவர் என்ன செய்தார் தெரியுமா?

இவர் ஆட்சிக்கு வந்த முதல் வருடம், முதலாம் மாதம் கர்த்தருடைய ஆலயத்தை திறந்து அதில் பழுதுகளை சரி செய்தார். அதுமட்டுமல்ல ஆசாரியரையும் லேவியரையும் அழைத்து உங்களைப் பரிசுத்தம் பண்ணிக்கொண்டு. கர்த்தருடைய ஆலயத்திலுள்ள அசுத்தமானதை வெளியே கொண்டு வந்து ஆலயத்தையும் பரிசுத்தம் பண்ணுங்கள் என்று கட்டளையிட்டார். அவர்களை அந்தபடியே தங்களையும் தேவனுடைய ஆலயத்தையும் பரிசுத்தம் பண்ணினார்கள். மேலும், நம்மை ஆட்சி செய்தவர்கள் (முன்னோர்கள்) பாவத்தின் நிமித்தம் கர்த்தர் நம்மேல் உக்கிர கோபம் கொண்டார்.

அவர் தம் உக்கிரகோபத்தை நம்மைவிட்டு திருப்புவதற்கு பாவநிவாரண பலிகளையும், சர்வாங்க தகனபலிகளையும் செலுத்துங்கள் என்று கட்டளையிட்டார். அவர்களும் அந்தபடியே செய்தார்கள்.



எசேக்கியா ராஜா தனக்கு முன்னிருந்தவர்கள் (மூதாதையர்கள், முன்னோர்கள்) போல பொல்லாத (கர்த்தருக்குப் பிரியமில்லாத) ஆட்சி செய்யாமல், கர்த்தரை விட்டு விலகின ஜனங்களை கர்த்தரிடமாக திருப்பினார். தாவீது ராஜாவைப் போல கர்த்தருடைய பார்வைக்கு செம்மையானதை (சரியானதை) செய்ததினாலே இவர் ஆட்சியின் காலத்தில் கர்த்தருடைய கிருபையினாலே நாடு பாதுகாப்பாக இருந்தது.

மனப்பாட வசனம்: சங்கீதம் 138:8

"கர்த்தர் எனக்காக யாவையும் செய்து முடிப்பார்; கர்த்தாவே, உமது கிருபை என்றுமுள்ளது;.."

– சகோதரி குயினி பிரதீப்

அக்டோபர் மாத கேள்விகள்



(யோவான் சுவிசேஷ புத்தகத்தில் இருந்து)

1) சீமோன் பேதுருவின் சகோதரன் யார்?

2) சீஷர்கள் எவ்வளவு தூரம் தண்டுவலித்தபோது இயேசு கடலின்மேல் நடந்து வந்தார்?

3) தேவனுக்கேற்ற கிரியை எது?

4) குமாரனிடத்தில் விசுவாசம் வைக்கிறவன் எதை அடைவான்?

5) மெய்யான போஜனம், பானம் எது?

6) உயிர்ப்பிக்கிறது எது?

7) உண்மையுள்ளவனிடத்தில் எது இல்லை?

8) எது உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு கூறினார்?

9) தாங்கள் யாருடைய சந்ததியாய் இருக்கிறோம் என்று யூதர்கள் கூறினார்கள்?

10) இயேசுவின் நாளைக் காண ஆசையாயிருந்து கண்டு களிகூர்ந்தவன் யார்?

பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-11-2026

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

சென்ற இதழின் பதில்கள்

1. யோவான் 4:9
2. யோவான் 4:39
3. யோவான் 4:52
4. யோவான் 5:2
5. யோவான் 5:6
6. யோவான் 5:25
7. யோவான் 5:33
8. யோவான் 5:39
9. யோவான் 5:46
10. யோவான் 6:1

சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1) G. ஏஞ்சலம்மாள் - மதுரை
2) Mrs. பிரியா ஆண்டனி - மதுரை
3) A. கார்பஸ் பிலேமோன் - மதுரை
4) R. சரோஜா - தென்கலம்
5) M.S. ஜேம்ஸ் - திண்டுக்கல்
6) Mrs. K.P. குமாரி சுமா - மதுரை
7) Mrs. J. இவாஞ்சலின் ஜோசப் - மதுரை
8) Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் - தூத்துக்குடி
9) Dr. ஆட்லின் ஆனந்தன் - மதுரை
10) A. அரவிந்த் - மதுரை
11) J. தாமஸ் ராபின்சிங் - பெரம்பலூர்
12) M. ராஜா - கரூர்
13) Mrs. M. ஜெனி ஈஸ்வரி - கரூர்
14) Mrs. C. வள்ளி சிதம்பரம் - கரூர்
15) A. லலிதா - புதுக்கோட்டை
16) S. கார்த்திக் - கரூர்
17) Mrs. J. பூங்கொடி ரவி - முத்தூர்
18) Mrs. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
19) S. சுசிலா ஆபிரகாம் - மதுரை
20) Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
21) Mrs. ஹெலன் திலக் - தூத்துக்குடி
22) Mrs. பெரில் பாஸ்கர் - படப்பை
23) Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் - நெல்லை
24) Mrs. ஹெப்ஸிபா தாமஸ் - படப்பை
25) A. ரோஸ்மேரி - சென்னை
26) Mrs. ஜாய் ஜோசப் - திருச்சி
27) Mrs. பியூலா ஜேசுராஜன் - புதுவை
28) P. ரேச்சல் சாலமோன் - மதுரை
29) Mrs. P. சமாதானம் பீட்டர் - விருதுநகர்
30) Mrs. குளோரி பால்ராஜ் - தஞ்சை
31) R. ஞானசிரோன்மணி - மதுரை
32) D. ராஜன் - மதுரை
33) S. டேவிட் சாந்தகுமார் - செங்கோட்டை
34) P.S. ருக்மணி - ஈரோடு
35) J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் - மதுரை
36) C. வைலட் கிறிஸ்டோபர் - தளவாய்புரம்
37) Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
38) Mrs. பெட்ரீஷியா டேவிட் - சேலம்
39) J.V. சுந்தரபாய் வில்லியம் - சேலம்
40) S.G. சேகர் - ராணிப்பேட்டை
41) Mrs. A. இமல்டா சுந்தர்சிங் - ஈரோடு
42) S. பாக்கியராஜம் - மதுரை
43) Y. ஜெயசுதா பொன்செல்வி - சென்னை
44) P. ரேச்சல் ஜானிமா - நெல்லை
45) J. விஜய் - மதுரை
46) Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
47) A. டேவிட் ஜெயசந்திரன் - மதுரை
48) J. ஜான்சி - ஆனைமலை
49) Mrs. இந்திரா பாண்டி - மதுரை
50) M. அன்பழகன் - தங்கமேடு
51) Mrs. சூரிய பிரியா - மதுரை
52) Mrs. ராணி குமரன் - கரூர்
53) N. ஞானசுந்தரி நாகராஜன் - பாளையங்கோட்டை
54) Mrs.D. குளோரி திலகவதி - சென்னை
55) S. பேபி சந்தோஷ்குமார் - தங்கமேடு
56) Mrs. தேவி ராஜாசிங் - திருப்பூர்
57) N. ஜான் செல்லையா - மதுரை
58) Mrs. J. ஜெயராணி ஜான் - மதுரை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : **45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.**
Printed & Published by **P.C. PHILEMON RAJAH**
Printed at **THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1** 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th October 2026
Posted at Arasaradi HPO on 10th & 11th October 2026

நமது ஆசிரியர் எழுதிய
இரண்டு
புதிய புத்தகங்கள்
கிடைக்கும்!











புதிய கைப்பிரதிகள்
கிடைக்கும்!

புத்தகம் மற்றும்
கைப்பிரதிகள் தேவைக்கு
92 4421 4421
& 92 4431 4431

If undelivered please return to :
EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To